"இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை, மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம், மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்" - *Dr.S.Jayabarathi in an Introduction to Thirukkural*

God told to man is **Geetha.** Man told to God is **Thiruvasagam**.
Man told to Man is **Thirukkural.**
*I saw these words on the web. It is nicely written.*
*I would like to add one more……….*

**சகோதர சகோதரிகளே:**
**இறைவனே வார்த்தையாக இருப்பது பைபிள்.**
**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோவான் 1:1)**

Brothers and Sisters:
God become the word is **Bible.**
**In the beginning was the Word, and the Word was with God, and the Word was God. (John 1:1)**

*இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை:*

**நீ என்னைக் கண்டதுபோல், வேதமோதியாவது, தவத்தாலாவது, தானம் செய்தாவது என்னைக் காணமுடியாது.**
**சத்ருக்களைத் தகிப்பவனே! இந்த நிலையில் என்னைக் காண்பதற்கு அநந்ய பக்தி ஒன்றிருந்தால்தான் முடியும். அது ஒன்றினால்தான் என்னை உள்ளபடி அறியவும், பார்க்கவும், அடையவும் முடியும்.**
**பாண்டவனே! எவனொருவன் எனக்காகக் கருமங்களைச் செய்து, என்னையே உயர்நிலையாகக் கொண்டு, எனக்கே பக்தனாகி, பற்றுதலை நீக்கி, எல்லா உயிர்களிடமும் விரோதமின்றி வழிபடுகிறானோ அந்த பக்தன் என்னை அடைகிறான்.**
**(பகவத்கீதை 11வது அதிகாரம் வசனம் 53-55).**

*God told to man is **Geetha.***

"The form you are seeing with your transcendental eyes cannot be understood simply by studying the Vedas, nor by undergoing serious penances, nor by charity, nor by worship. It is not by these means that one can see Me as I am."
"My dear Arjuna, only by undivided devotional service can I be understood as I am, standing before you, and can thus be seen directly. Only in this way can you enter into the mysteries of My understanding."
"My dear Arjuna, he who engages in My pure devotional service, free from the contaminations of fruitive activities and mental speculation, he who works for Me, who makes Me the supreme goal of his life, and who is friendly to every living being—he certainly comes to Me."
(Bhagavad Gita 11:53-55) (Referenec: http://www.bhagavad-gita.org/)

*கடவுள் ஒருவரை மட்டுமே உயர்த்தி, அவரிடம் மட்டுமே பக்திகொண்டு அவருக்காகவே கிரியைகளைச் செய்து, இந்த மாயையான உலகிலே உள்ள பற்றுதலை விட்டு வாழ்வது, கடினம் என்று உங்களுக்குத்தோன்றலாம்.*

***இது நம்மாலே கூடாது, இறைவன் அருளால் கூடும்.***
***இதை மனிதனே இறைவனுக்குச் சொல்கிறதை கவனியுங்கள்.***

*மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்:*

**சிவன் அவன் என் சிந்தையுள்நின்ற அதனால்**
**அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்**
**சிந்தை மகிழ சிவ புராணம் தன்னை**
**முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.**
திருவாசகம் 1:17-20

*Man told to God is **Thiruvasagam**.*

Because He, Civan, within my thought abides,
**By His grace alone, bowing before His feet,**
With joyous thought, Civan's 'Ways of Old' I'll tell,
That thus my former 'deeds' may wholly pass. (20)
Thiruvasagam 1:17-20
(Reference:
http://www.tamilnation.org/sathyam/east/thiruvasagam/tvasagam01.htm)

*கற்றதனால் வருகிற அறிவு, இறைவன் கொடுத்த நன்மை.*
*அவர் கொடுத்த நன்மையினாலே **அவரை அறிந்துகொள்ளவும்** அவரைத் தொழுதுகொள்ளவும் நாம் ஈடுபடுவதுதான் நாம் கற்றதனால் உண்டான பயன்.*
*என்று மனிதனே மனிதனுக்கு அருமையாக சொல்வதை கவனியுங்கள்.*

*மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்:*

**கற்றததனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** குறள் 2
**தூய அறிவு வடிவான இறைவனின் நன்மை தரும் திருவடிகளைத் தொழாதவர் என்றால், அவர் கற்றதனால் உண்டான பயன் யாதுமில்லை.**

*Man told to Man is **Thirukkural.***

No fruit have men of all their studied lore,
Save they the ‘Purely Wise One’s’ feet adore. Kural 2
What profit have those derived from learning, who worship not the good feet of Him who is possessed of pure knowledge?
(Reference: http://www.thirukural.com/)

**இறைவனே வார்த்தையாக இருப்பது பைபிள்.**

**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.**
**அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.**
**உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. (யோவான் 1:1,4,9)**

*God become the word is* ***Bible.***

**In the beginning was the Word, and the Word was with God, and the Word was God.**
**In him was life, and that life was the light of men.**
**The true light that gives light to every man was coming into the world.**
John: 1:1,14,4,9. (Reference: http://www.tamilbible.com/)

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள் 247)**

As to impoverished men this present world is not;
The ‘graceless’ in you world have neither part nor lot.
**As his world is not for those who are without wealth. So that world is not for those who are without kindness. (Kural 247)**

**பாவத்தின் சம்பளம் மரணம்:**
**தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.**

**For the wages of sin is death, but the gift of God is eternal life in Christ Jesus our Lord.**
(**ரோமர்**/Romans 6:23)

**இறைவனுடைய அருளைப் பெற்று, அவ்வுலகத்தை அடைய, நம்மை மனிதர்களாலே வழிநடத்த முடியாத இந்த உலக சூழ்நிலையில், இறைவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக இறைவனே வந்ததை இறைவனின் வார்த்தையை வாசித்து அறிந்துகொள்ளுங்கள்.**

**To receive God’s blessing to reach God’s kingdom, No human being can guide us in this world. So God himself came to us, as a Mediator between God and men. Please read the word of God to know more about this.**

**தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.**

**For there is one God and one mediator between God and men, the man Christ Jesus, (1 Timothy 2:5)**

**Thank You. God Bless You.**
**www.kalyanam.ca**